**செய்தி வெளியீடு எண்: 562** **நாள்:01.09.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், லண்டனில் உள்ள சர்வதேச புகழ் பெற்ற KEW தாவரவியல் பூங்காவினை இன்று (01.09.2019) பார்வையிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், லண்டனில் உள்ள சர்வதேச புகழ் பெற்ற KEW தாவரவியல் பூங்காவினை பார்வையிட்டு தமிழகத்தில் உள்ள தாவரவியல் பூங்காக்களை மேம்படுத்துவது தொடர்பாக ஆலோசனை நடத்தினார்கள்.

பல்வேறு நாடுகளின் அந்தந்த பருவகாலங்களில் வளரும் பூச்செடிகள், காய்கறிசெடிகள், மற்றும் பலவகையான தாவரங்கள் இங்கிலாந்து நாட்டில் உள்ள KEW தாவரவியல் பூங்காவில் அந்தந்த தாவரங்களுக்கு ஏற்ற சீதோஷன நிலையை செயற்கையாக ஏற்படுத்தி உலகமே வியக்கும் வண்ணம் தாவரவியல் பூங்கா அமைக்கக்பட்டுள்ளது. Amazon Tropical Climate ல் வளரும் தாவரங்கள், பாலைவனத்தில் வளரும் தாவரங்கள், குளிர் பகுதியில் வளரும் தாவரங்களின் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு முறை குறித்தும், அதை வேளாண் ஆராய்ச்சிக்காக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு கேட்டறிந்தார்கள்.

இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், முதலமைச்சரின் செயலாளர்கள் முனைவர். எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., டாக்டர் பி. செந்தில்குமார், இ.ஆ.ப., மற்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**